حیا اور پاکدامنی کی اہمیت

# கற்பொழுக்கம் காப்போம்

மௌலானா பீர் துல்ஃபிகார் அஹ்மத்
ஸாஹிப் நக்ஷபந்தீ (ரஹ்)

தமிழில்
மௌலானா ரியாஜுத்தீன் ஹஸனீ
பேராசிரியர்: உஸ்வதுல் ஹஸனா
பள்ளபட்டி

வெளியீடு
கான்காஹெ தாரே ஈமான்
காயிதெமில்லத் நகர்
மேல்விஷாரம்

## உள்ளே


முன்னுரை.................................................................. 5

வெட்கம் மேலும் பரிசுத்தமான
வாழ்வின் முக்கியத்துவம்........................................ 7

குர்ஆனின் பார்வையில் ஒழுக்கமுள்ள, பரிசுத்தமான
வாழ்வு..................................................................... 11

ஹதீஸின் பார்வையில் ஒழுக்கமுள்ள, பரிசுத்தமான
வாழ்வு..................................................................... 14

கற்பொழுக்கத்துடன் வாழ்வது நபிமார்களின்
அடையாளமாகும்..................................................... 17

பரிசுத்தமான வாழ்வு இறைநேசம் பெறுவதற்கான
நிபந்தனையாகும்.................................................... 20

பரிசுத்தமான வாழ்வினால் உலகிலேயே கிடைக்கும்
உதவிகள்................................................................. 32

பரிசுத்தமான வாழ்விற்கு மஹ்ஷர் மைதானத்தில்
கிடைக்கும் கண்ணியம்........................................ 47

பரிசுத்தமான வாழ்விற்கே சுவன சுபச்செய்தி.......... 49

கற்பொழுக்கமுள்ள வாழ்வும், இறை தரிசனமும்...... 50

ஹதீஸ்களில் கற்பொழுக்கமுள்ள வாழ்வு பற்றிய
பிரார்த்தனைகள்..................................................... 51

பரிசுத்தமான வாழ்வு மீதான நபித் தோழர்களின்
ஆர்வம்.................................................................... 54

ஈமான் கொண்ட பெண்களிடம் கற்பு மற்றும்
ஒழுக்கத்தில் நிலைத்திருக்க பைஅத் செய்தல்......... 58

வெட்கமின்மையின் வெட்கக்கேட்டைப் பற்றி
குர்ஆனில்............................................................... 60

# முன்னுரை

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ
وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ اَمَّا بَعْدُ

அல்லாஹ் தனது பேரருளாலும் அன்பாலும், மனிதனைஉயர்ந்தநற்குணங்களால்அலங்கரித்து படைப்புகளில் சிறந்தவனாக ஆக்கியுள்ளான்.

இஸ்லாமில்,மனிதனைஉயர்த்துபவைஅவன் உடலமைப்பு அல்லது செல்வம் அல்ல; மாறாக அவனது ஒழுக்கமும், தூய்மையான வாழ்வுமாகும். அத்தகைய பரிசுத்தமான குணங்களில் ஒன்றான வெட்கம் குறித்து நம் மார்க்கம் மிகுந்த முக்கியத்துவத்தையும் உயர்ந்த மதிப்பையும் வழங்குகிறது.

வெட்கம் என்பது ஒரு சாதாரண குணமல்ல; ஈமானின் அடையாளம், நேர்வழி வாழ்க்கையின் அடித்தளம், சுவனத்திற்கு வழிகாட்டும் ஒரு அரிய மானக்கொடையாகும்.

அல்லாஹ்வின் தூதர் முஹம்மது நபி ﷺ அவர்கள், "வெட்கம் என்பது ஈமானின் ஒரு பகுதி" என்று கூறி, இந்த குணம் இல்லாத வாழ்க்கை

எல்லா தீமைகளுக்கும் கதவைத் திறக்கும் என எச்சரித்தார்கள்.

இந்த நூல் வெட்கம், கற்பொழுக்கம் மற்றும் பரிசுத்தமான வாழ்வு ஆகிய இஸ்லாமின் அழகிய குணங்களை, குர்ஆன் வசனங்களின் ஒளியிலும், நபிமார்களின் வாழ்க்கை எடுத்துக்காட்டுகளிலும் நெகிழ்ச்சியுடனும் தெளிவுடனும் விளக்குகிறது.

இன்றைய வேகமான வாழ்க்கையில் ஒழுக்கம் குறைந்து வரும் இந்தக் காலத்தில், இந்த நூல் ஒவ்வொரு முஸ்லிமின் இதயத்திலும் வெட்கம் மற்றும் பரிசுத்தம் மீண்டும் மலரச் செய்யும் ஒரு ஒளிக்கதிர் ஆக அமையும் என நம்புகிறோம்.

இந்த புத்தக தயாரிப்பில் உழைத்தவர்களு க்கும், இதை வாசிக்கின்ற ஒவ்வொரு இல்லத் தரனுக்கும், இல்லத்தரசிக்கும், இளைஞருக்கும், ஆசிரியருக்கும், மாணவருக்கும் அல்லாஹ் பரக்கத்தை அருள்வானாக.

அல்லாஹ் நம் எல்லோரையும் பரிசுத்தமான இன்னும் கற்புள்ள அழகான வாழ்க்கை வாழ வழி நடத்துவானாக. ஆமீன்!

**மவ்லானா முஃப்தி ஷகீல் அஹ்மத் ஸாஹிப் நக்ஷபந்தீ**
**துணை முதல்வர்: மத்ரஸா பாகியாதுஸ்ஸாலிஹாத்,**
**வேலூர்**

# வெட்கம் மேலும் பரிசுத்தமான வாழ்வின் முக்கியத்துவம்

அல்லாஹ் மனிதனை படைப்புகளில் சிறந்தவனாக ஆக்கி இயல்பான பல தனித்தன்மைகளை வழங்கியுள்ளான். இத்தனித்தன்மைகளில் ஒன்றுதான் வெட்கமாகும். மார்கக் கண்ணோட்டத்தில்; வெட்கம் என்பது ஒரு நபரை அசிங்கமான மற்றும் விரும்பத்தகாத செயல்களைச் செய்வதை விட்டும் தடுக்கக்கூடிய குணமாகும். ஒரு முஃமினான நபர் வெட்கம் மற்றும் தன்னடக்கம் கொண்டவராக மாறி சமூகத்தில் அமைதி மற்றும் நிம்மதியை நிலைநாட்ட பாடுபடக்கூடியவராக இருக்க வேண்டும் என்பதற்காக இஸ்லாமிய மார்க்கம் வெட்கத்தின் முக்கியத்துவத்தை அதிகம் வலியுறுத்தியுள்ளது.

ஒரு முறை ஒரு அன்சாரித்தோழர் தனது சகோதரரிடம் "அதிகம் வெட்கப்பட வேண்டாம்" என்று உபதேசம் செய்துகொண்டிருந்ததைப் பார்த்த நபி ﷺ அவர்கள் அவரிடம் அவரை விட்டுவிடவும் إِنَّ الْحَيَاءَ مِنَ الْإِيمَانِ

வெட்கம் என்பது ஈமானின் ஒரு பகுதி என்று கூறினார்கள்.

மற்றும் ஒரு ஹதீஸில், நபி ﷺ அவர்கள் அவரிடம் اَلْحَيَاءُ لَا يَأْتِيْ اِلَّا بِخَيْرٍ வெட்கம் நன்மைக்கு மட்டுமே வழிவகுக்கும் என்று கூறினார்கள்.

இதன் மூலம் ஒருவர் எவ்வளவு தன்னடக்கம் மற்றும் வெட்கமுள்ளவராக மாறுகிறாரோ, அவ்வளவு நன்மையும் அவரிடம் அதிகரிக்கும் என்று தெரிகிறது. வெட்கம் என்பது மறுமையில் ஒருவரை சொர்க்கத்திற்கு தகுதியானவராக மாற்றும் குணங்களில் ஒன்றாகும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்;

اَلْحَيَاءُ مِنَ الْاِيْمَانِ وَالْاِيْمَانُ فِي الْجَنَّةِ وَالْبَذَاءُ مِنَ الْجَفَاءِ
وَالْجَفَاءُ فِي النَّارِ

வெட்கம் என்பது ஈமானின் ஒரு பகுதியாகும், ஈமான் என்பது சொர்க்கத்தில் நுழைவதற்குக் காரணமாகும்; வெட்கமின்மை என்பது அடங்க மறுப்பதாகும். அடங்க மறுப்பதென்பது நரகத்தில் நுழைவதற்குக் காரணமாகும்.

அடக்கம் என்பது ஒருவரின் வார்த்தைகளிலும் செயல்களிலும் அழகையும், நேர்த்தியையும் உருவாக்குகிறது. எனவே ஒரு அடக்கமான நபர் படைப்பினங்களின் பார்வையில் கவர்ச்சிகரமான

வராகவும், பிரபஞ்சத்தை படைத்த அல்லாஹ்வின் பார்வையில் ஏற்றுக்கொள்ளத்தக்கவராகவும் மாறுகிறார்.

இதற்கு திருக்குர்ஆனிலும் சான்றுகள் உள்ளன. நபி ஷுஐப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் நற்பேறுபெற்ற மகள்களில் ஒருவர் நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை அழைக்க வந்தபோது அவரது நடையில் அடக்கமும், வெட்கம் மற்றும் நிதானப்போக்கும் இருந்ததால் சர்வவல்லமையுள்ள அல்லாஹ், இப்பெண்ணின் கூச்சஉணர்வை மிகவும் விரும்பினான். அதனால் அவன் திருக் குர்ஆனில் அதைப் பற்றிக் குறிப்பிடும் போது

وَجَآءَتْهُ اِحْدٰىهُمَا تَمْشِىْ عَلَى اسْتِحْيَآءٍ

**"அவர்களில் ஒரு பெண் தன் நடையில் வெட்கம் ததும்ப நடந்து வந்தாள்"** என்று கூறியுள்ளான்.

ஒரு அடக்கமான நபரின் நடத்தையும் பேச்சும் அல்லாஹ்வுக்கு இவ்வளவு பிடித்தமானதாக இருக்கும் போது அவரது குணம் எவ்வளவு ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும், பிடித்ததாகவும் இருக்கும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே தன்னடக்கம் மற்றும் வெட்கம் போன்ற ஒரு அருட்கொடையை இழந்தவர்

உண்மையில் மாபெரும் ஒரு பாக்கியத்தை இழந்தவராவார். அத்தகைய நபரிடமிருந்து நன்மையை எதிர்பார்ப்பது பயனற்றது.

உனக்கு வெட்கம் இல்லாதபோது, நீ விரும்பியதைச் செய்து கொள் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

வெட்கமற்ற ஒருவன் எந்த நெறிமுறை களுக்கும் கட்டுப்பட்டவன் அல்ல. அவனது வாழ்க்கை கடிவாளமற்ற மிருகத்தின் வாழ்க்கை போன்றதாகும். வெட்கம் என்பது ஒரு நபரை தூய்மை மற்றும் கற்பொழுக்கமுள்ளவராக வாழ ஊக்குவிக்கும் குணமாகும். வெட்கம் மற்றும் கற்பொழுக்கம் ஆகிய இரு தன்மைகள் நகமும், சதையும் போல ஒருபோதும் பிரிக்க முடியாதவை என்று கூட சொல்லலாம். இந்த உண்மையை பின்வரகூடிய கருத்துக்களிலிருந்து தெளிவாக உணரலாம்.

# குர்ஆனின் பார்வையில் ஒழுக்கமுள்ள, பரிசுத்தமான வாழ்வு

## புனித குர்ஆனின் பார்வையில் மகத்தான வெகுமதிக்கான வாக்குறுதி;

وَالْحَافِظِيْنَ فُرُوْجَهُمْ وَالْحَافِظَاتِ وَالذَّاكِرِيْنَ اللّٰهَ كَثِيْرًا
وَالذَّاكِرَاتِ اَعَدَّ اللّٰهُ لَهُمْ مَغْفِرَةً وَّاَجْرًا عَظِيْمًا

**தங்கள் அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாத்துக்கொள்ளும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இன்னும் அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூரும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார் செய்து வைத்திருக்கிறான்.**

அல்லாஹ்வை திக்ரு செய்வதுடன் தூய்மை யான வாழ்க்கை வாழும் நல்லோர்களுக்கு, அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான நற்கூலி யையும் தயார் செய்து வைத்திருக்கிறான் என்பதை இந்த வசனம் எவ்வளவு தெளிவாக விளக்குகிறது.

மகத்தான நற்கூலி என்பது இவ்வுலகின் பரக்கத்துக்களையும், மறுவுலகின் பாக்கியங்களை யும் குறிக்கிறது. அதே சமயம் மன்னிப்பு என்பது

பரிசுத்தமான வாழ்வு வாழக்கூடிய நபரின் தவறுகளையும், குறைபாடுகளையும் அல்லாஹ் விரைவில் மன்னிப்பான் என்பதைக் குறிக்கிறது.

ஒரு மாணவன் தனது படிப்பில் திறமை யானவராகவும், விடாமுயற்சியுடனும் இருந்தால், ஆசிரியர் அவரது மற்ற குறைபாடுகளைப் புறக்கணிப்பது இயல்பானதே. நற்கூலி என்ற வார்த்தையுடன் «மகத்தான» என்ற சொல் கற்பொழுக்கமுள்ள வாழ்விற்கு கிடைக்கும் வெகுமதிகள் வழக்கமான விதிமுறையை விட அதிகமாக இருப்பதைக் குறிக்கிறது. எப்படியிருந்தாலும், பெரியவர்கள் ஒன்றை பெரியது என்று வர்ணித்தால் உண்மையில் அது அவர்களின் தகுதிக்கேற்ப பெரியது என்றே பொருள் கொள்ளப்படும். இங்கே, பிரபஞ்சத்திற்கே அதிபதியான அல்லாஹ் கற்பொழுக்கத்திற்கான வெகுமதி மிகப்பெரியது என்று கூறுகின்றானென்றால் அந்த வெகுமதி உண்மையில் மிகப்பெரியதாகவே இருக்க வேண்டும். தூய்மையான வாழ்க்கையை வாழ்வதன் மூலம், அத்தகைய வெகுமதியைப் பெறத்தகுதி யானவர்களாக மாறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு நல் வாழ்த்துக்கள்.

பாக்கியசாலிகளுக்கு அவர்கள் அடைந்த பாக்கியங்களால் ஆனந்தம் பெறுகட்டுமாக!

## பரிபூரண வெற்றி பற்றிய நற்செய்தி

وَالَّذِيْنَ هُمْ لِفُرُوْجِهِمْ حَافِظُوْنَ

அல்லாஹ் கூறுகிறான்: தங்கள் அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய முஃமீன்களே நிச்சயம் வெற்றிபெற்றவர்கள்.

மேற்கூறப்பட்ட இந்த வசனத்தில் நிரந்தர வெற்றி பெறக்கூடிய விசுவாசியின் சில குணங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று அவரது பரிசுத்தமான தூய்மையான வாழ்வாகும். பரிசுத்தமான மக்களால் மட்டுமே முழுமையான வெற்றியை அடைய முடியும் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

அரபுமொழியில்,'ஃபலாஹ்' என்பது தோல்வியே தொடர்ந்து வராத நிரந்தர வெற்றியை, துக்கமே துரத்தாத நிலையான மகிழ்ச்சியை, இழிவுக்கு வழிகொடுக்காத மாறாத கண்ணியத்தைக் குறிக்கிறது என்று முஃபஸ்ஸிர்கள் கூறியுள்ளனர்.

# ஹதீஸின் பார்வையில் ஒழுக்கமுள்ள, பரிசுத்தமான வாழ்வு

1) நபி ﷺ அவர்கள் ஒருமுறை குறைஷி இளைஞர்களிடம் கூறினார்கள்:

يَا شَبَابَ قُرَيْشٍ، اِحْفَظُوا فُرُوْجَكُمْ، لَا تَزْنُوْا،
أَلَا إِنَّ مَنْ حَفِظَ فَرْجَهُ فَلَهُ الْجَنَّةُ

குறைஷி இளைஞர்களே உங்கள் அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். விபச்சாரம் செய்யாதீர்கள். அறிந்க் கொள்ளுங்கள்! யார் தனது அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்கிறாரோ அவருக்கு சொர்க்கம் உண்டு.

இந்த ஹதீஸில் தங்கள் அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாத்து, விபச்சாரத்தின் மூலம் மனோ இச்சை, காமப்பசி, ஷைத்தானிய வெறித்தனம் மற்றும் தற்காலிக சிற்றின்பங்களைத் தனித்துக் கொள்வதை விட்டும் தங்களைத் தற்காத்துக் கொள்பவர்களுக்கு சொர்க்கத்தின் நித்திய மகிழ்ச்சி வழங்கப்படும் என்ற உண்மையை பல தெளிவான வார்த்தைகளால் விளக்கப்பட்டுள்ளது.

இதற்குத தான் 'சின்னஞ்சிறிய முயற்சி பென்னம்பெரிய இலாபம்' என்று கூறப்படும்.

ஹஜ்ரத் நிசார் ஃபத்ஹி கூறுகிறார்கள்;

வெளிச்சத்திலோ அல்லது நெருப்பிலோ
இருந்தாலும் எல்லா இடங்களிலும் நண்பனின்
நினைவிலேயே இருங்கள்

இலையுதிர் காலத்தின் சில காற்றுகளைத்
தாங்கிக் கொள்ளுங்கள்.

பின்னர் எப்போதும் வசந்த கால இன்பத்தில்
இருப்பீர்கள்.

2) அபூ சுஃப்யான் இன்னும் இஸ்லாத்திற்கு மாறாதிருந்தும், ரோமானியப் பேரரசர் ஹிரக்கல் அபூ சுஃப்யானிடம் நபி ﷺ அவர்கள் என்ன போதிக்கிறார்கள் என்று கேட்டபோது, அவர் நபி ﷺ அவர்களின் போதனைகளின் சுருக்கத்தை பின்வருமாறு எளிமையான சொற்களில் கூறினார்:

يَأْمُرُنَا بِالصَّلَاةِ وَالصَّدَقَةِ وَالْعَفَافِ وَالصِّلَةِ

அவர்கள் எங்களைத் தொழவும், தர்மம் செய்யவும், கற்பொழுக்கத்துடன் வாழவும், நல்லுறவுகளைப் பேணவும் கட்டளையிடுகிறார்கள்.

இதன் மூலம் கற்பொழுக்கத்துடன் வாழ வேண்டும் என்ற கட்டளை இஸ்லாத்தின் அடிப்படை போதனைகளில் ஒன்றாகும் என்பது தெளிவாகிறது. மாறாக கற்பொழுக்கம் என்பது இஸ்லாமிய சமுதாயத்தின் கட்டுமானத்தின் தூண் களில் ஒன்றாகும் என்று கூட சொல்லலாம்.

# கற்பொழுக்கத்துடன் வாழ்வது நபிமார்களின் அடையாளமாகும்

1. மனிதகுலத்தை வழிநடத்த ஒளியின் கலங்கரை விளக்கங்களாக அல்லாஹ் அனுப்பிய தூய மனிதர்கள் தான் நபிமார்கள். அவர்கள் அனைவருமே தூய்மையும், கற்பும் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்து, தங்களது அன்பர்கள், மற்றும் உறவினர்களையும் அவ்வாறே வாழ ஊக்குவித்தார்கள். எனவே, பரிசுத்தமான கற்பொழுக்கமுள்ள வாழ்வே நபிமார்களின் அடையாளமாகும்.

அல்லாஹ் ஹஜ்ரத் ஜகரிய்யா (அலை) அவர்களுக்கு ஒரு மகனுடைய பிறப்பு பற்றி நற்செய்தி கூறியபோது;

سَيِّدًا وَحَصُورًا وَنَبِيًّا مِنَ الصَّالِحِينَ

**அவர் ஒரு தலைவராக இருப்பார், அவர் தனது ஆன்மாவை கட்டுப்படுத்துபவராக இருப்பார், அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருப்பார், அவர் ஒரு உயர்ந்த பதவியில் இருப்பார், பணிவான மனிதராக இருப்பார்" என்று கூறினான்.**

அரபியில், "ஹசூர்" என்ற சொல் தனது ஆசைகளைக் கட்டுப்படுத்தி, நஃப்சுடைய

இச்சைகளுக்கு ஏமாறாதவர் என்ற அர்த்தத்தைக் குறிக்கும். ஹஜ்ரத் யஹ்யா (அலை) அவர்களின் வாழ்க்கை இந்த குணத்திற்கு ஒரு சரியான எடுத்துக்காட்டாகவே இருந்தது.

2. மிஸ்ருடைய அதிபரின் மனைவி ஜுலைகா, மூடிய அறையில் சிறந்த வாய்ப்பைக் கண்டு, ஹஜ்ரத் யூசுப் (அலை) அவர்களிடம் தனது காம இச்சையை வெளிப்படையாக வெளிப்படுத்தியபோது, அவர்கள் உடனடியாக, "நான் அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுகிறேன்" என்று கூறினார்கள். ஹஜ்ரத் யூசுப் (அலை) அவர்கள் இந்த அழைப்பை மறுத்ததற்காக சிறைச் சாலையின் கஷ்டங்களைத் தாங்க வேண்டியிருந்தாலும், ஜுலைகாவே தனது சொந்த நாவினால்

وَلَقَدْ رَاوَدتُّهُ عَن نَّفْسِهِ فَاسْتَعْصَمَ

தான் விரும்பியதைப் பெற அவரை மயக்கியதாகவும், ஆனால் அவர் தூய்மையாகவே இருந்தார் என்றும் ஒப்புக்கொண்ட ஒரு காலம் வந்தது.

சர்வவல்லமையுள்ள அல்லாஹ், ஹஜ்ரத் யூசுப் (அலை) அவர்களைப் புகழ்ந்து;

وَكَذَٰلِكَ لِنَصْرِفَ عَنْهُ السُّوءَ وَالْفَحْشَاءَ ۚ إِنَّهُ مِنْ عِبَادِنَا الْمُخْلَصِينَ

அவரிடமிருந்து தீமையையும் அநாகரீகத்தையும் நாம் விலக்கி வைப்பதற்காக. உண்மையில், அவர் நமது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களில் ஒருவர் என்று கூறினான். அனைத்து நபிமார்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே.

அவர்கள் அனைவருமே தூய்மை மற்றும் கற்புள்ள வாழ்க்கை வாழ்ந்தவர்களாவார்கள் என்பதை இதன் மூலம் அறியலாம். இங்கும் கற்பொழுக்கம் என்பது தீர்க்க தரிசனத்தின் ஒரு பகுதி என்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

# பரிசுத்தமான வாழ்வு இறைநேசம் பெறுவதற்கான நிபந்தனையாகும்

எல்லாம் வல்ல அல்லாஹ், புனித குர்ஆனில் நல்லடியார்களின் குணங்களை விவரிக்கும் போது கூறுகிறான்: وَلَا يَزْنُوْنَ மேலும் அவர்கள் விபச்சாரம் செய்யாதவர்கள்.

இவ்வசனம் இறைநேசர்கள் விபச்சாரத்தை விட்டும் தவிர்ந்திருப்பார்கள் என்பதை சுட்டிக் காட்டுகிறது.மேலும் ஒவ்வொரு ஆன்மீகத்தேடல் கொண்டவர்களும் நல்ல செயல்களைச்செய்வது, பாவங்களை விட்டு விலகி இருப்பதில் நிலைத் திருப்பதின் மூலமாக இறைநேசத்தைப் பெற முடியும் என்பதும் தெளிவாகிறது. அதேசமயம் அல்லாஹ்வின் நண்பர்களை அல்லாஹ் தனது பாதுகாப்பின் கீழ் எடுத்துக்கொண்டு, எல்லா வகையான பெரும் பாவங்களிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்கிறான் என்பதும் உண்மை யானது. இது அல்லாஹ்வுடைய கருணையின் வெளிப்பாடும் மற்றும் அவனது நட்பின் கடமையாகவும் இருக்கிறது. அல்லாஹ் அவனே மிகுந்த கருணையுள்ளவனாக, மிகச் சிறந்த

நண்பனாக இருக்கிறான்.

அல்லாஹ்வின் நல்லடியார்கள், தங்கள் உண்மையான அன்பினால், அவனல்லாதவற்றின் பால் பார்ப்பதைக் கூட விரும்பமாட்டார்கள். ஒரு பரம ஏழையான, கைவிடப்பட்ட அனாதையான ஆதரவற்ற ஒரு பெண்ணை ஒரு ராஜா மணமுடித்து தன் நாட்டின் மகாராணியாக்கினார். அவனுடைய அரண்மனையில் அனைத்து சௌகரியங்களையும் வழங்கியிருந்தான். எந்நேரமும் பணியாட்கள் சேவை செய்ய தயாராக இருந்தார்கள். அணிவதற்கென ஆடம்பரமான ஆடைகளும், சாப்பிட குடிக்க மிதமிஞ்சிய உணவு பானங்களும் ஏற்பாடுசெய்து தந்திருந்தார். மேலும் அவளுடைய கட்டளைப்படியே நகைகள் மற்றும் வைரங்களுடைய கருவூலத்தின் கதவுகள் திறக்கப்படும் என்ற சூழல் இருந்தது. இவ்வாறாக எல்லா விதமான வசதி வாய்புகளையும் செய்து தந்திருந்தார்.

அத்துடன் தனது ராணியை அன்பு மற்றும் மரியாதையுடன் எந்த குறையுமில்லாமல் வைத்திருந்தான். இவ்வாறிருக்க நாற்றமடிக்கக் கூடிய ஆடை மற்றும் அசுத்தமான உடலுடைய ஒரு அசிங்கமான தோட்டி அந்த ராணியை மயக்க எண்ணினால் அதுவும் ராஜா இவ்விஷயத்தை

அறிந்திருந்தால் ஒரு போதும் அந்த ராணி இவனை ஏறெடுத்தும் பார்க்கமாட்டாள். அவனது எந்த தந்திரங்களுக்கும் மயங்கமாட்டாள்.

இறை நேசர்களுடைய இதயங்களின் நிலையும் இவ்வாறு தான். ஒருபுறம், எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களுக்கு எண்ணற்ற உதவிகளை வழங்கியுள்ளான். ஒவ்வொரு கணமும், அவர்களின் இதயங்களின் மீது இறை அருள் மழையாய் பொழிந்து கொண்டிருக்கிறது. அவர்கள் படிப்படியாக அல்லாஹ்வின் உதவியையும் ஆதரவையும் காண்கிறார்கள். அல்லாஹ் அவர்களை உலகின் துக்கங்களிலிருந்து காப்பாற்றி அவனது அன்பின் இனிமையை அவர்களுக்கு வழங்குகிறான்.

அத்தகைய சூழ்நிலையில், மஹ்ரம் அல்லாத எந்த ஒருவரும் பாவத்தின் பால் அவர்களின் கவனத்தைத் திருப்ப எண்ணினால் அவர்கள் இது போன்ற அற்ப அபிலாஷைகளுக்கு அடிபணிந்து தங்கள் உண்மையான இறைவனை அதிருப்தி அடையச் செய்ய ஒரு போதும் எண்ணமாட்டார்கள்.

ஹஜ்ரத் சுலைமான் இப்னு யசார் (ரஹ்) அவர்கள் ஒரு பிரபலமான ஹதீஸ் கலை அறிஞர் ஆவார்கள். ஒருமுறை தன் தோழர்களுடன் ஹஜ்ஜுடைய பயணத்தை மேற்கொண்டிருந்த

போது வழியில் ஒரு வனாந்தரத்தில் எல்லோரும் முகாமிட்டனர். அவரது தோழர்கள் ஏதோ வேலைக்காக அருகிலிருந்த நகரத்திற்குச் சென்றிருந்தனர். சுலைமான் (ரஹ்) மட்டும் தனது கூடாரத்தில் தனியாக இருந்தார்கள்.

அந்த நேரத்தில், ஒரு அழகான பெண் அவரது கூடாரத்திற்கு வந்து ஏதோ கேட்பதைப் போன்று சைகை செய்தாள். சுலைமான் (ரஹ்) அவர்கள் அவளுக்கு கொஞ்சம் உணவு கொடுக்க விரும்பினார்கள். ஆனால் அந்த பெண் வெளிப்படையாக;'ஒரு பெண் ஒரு ஆணிடமிருந்து விரும்புவதை நான் உன்னிடமிருந்து விரும்பு கிறேன். பார்! நீ இளமையாக இருக்கிறாய். நான் அழகாக இருக்கிறேன். நாம் இருவரும் தனிமையை அனுபவிக்க வாய்ப்பு உள்ளது' என்று கூறினாள்.

இதைக் கேட்ட ஹஜ்ரத் சுலைமான் இப்னு யாசர் (ரஹ்) அவர்கள், தனது வாழ்நாள் முழுவதும் சிரமப்பட்டு அடைந்த வெகுமதியை வீணாக்கவே சைத்தான் இந்தப் பெண்ணை அனுப்பியுள்ளான் என்பதை விளங்கிக் கொண்டு அல்லாஹ்வை பயந்து அழத் தொடங்கினார்கள். இக்காட்சியைப் பார்த்த அந்தப் பெண் வெட்கத்துடன் திரும்பிச் சென்று விட்டாள்.

ஹஜ்ரத் சுலைமான் இப்னு யாசர், தான் அந்த பேரழிவிலிருந்து தப்பித்ததற்காக அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்தார்கள். அன்றைய இரவு உறக்கத்தில் ஹஜ்ரத் யூசுப் (அலை) அவர்களைக் கனவில் கண்டார்கள். ஹஜ்ரத் யூசுப் (அலை) அவர்கள் 'ஒரு இறைத்தூதர் செய்ததை நீங்கள் ஒரு இறைநேசராக இருந்து செய்துள்ளீர்கள். தங்களுக்கு சுபச் செய்தி உண்டாகுக என்று கூறினார்கள்.

நல்லோர்களின் தொடர்பினால் கிடைத்த ஒளி என் நெஞ்சில் படர்ந்தபோது எனக்குள் ஒருவித சாந்த நிலையை, இதயக் குளிர்ச்சியை உணர்ந்தேன். நான் வாலிபனாக இருப்பினும் ஒரு பெண்ணுக்கும், சுவருக்கும் மத்தியில் எவ்வித வேறுபாட்டையும் அறியாத பரவச நிலையை அடைந்தேன் என்று ஹஜ்ரத் பா யாஜீத் பஸ்தாமி (ரஹ்) கூறினார்கள்.

மேற்கண்ட சம்பவங்கள் பரிபூரண ஞானிகள் இறை அன்பின் உண்மையான சுகத்தினால் காமம் மற்றும் மனோ இச்சைகளின் அற்ப சுகங்களிலிருந்து விடுபட்டு விடுகின்றனர் என்பதை உண்மைப்படுத்துகின்றன.

இறைநேசர்களின் அடையாளங்களில் ஒன்று அவர்கள் கற்பொழுக்கமுள்ள தூய்மையான

வாழ்க்கைக்குச் சொந்தக்காரர்களாக இருப்பார்கள். தற்செயலாக மனித சுபாவத்தின் இயல்பினால் ஏதேனுமொரு பாவம் நிகழ்ந்துவிட்டால் உண்மை யான தவ்பாவின் மூலம் அது மன்னிக்கப்படும் வரை அவர்கள் திருப்தி அடைய மாட்டார்கள்.

ஹஜ்ரத் மாயிஜ் அஸ்லமி (ரலி) அவர்க ளின் சம்பவம் இதற்கு ஒரு நல்ல சான்றாகும். உண்மையான தவ்பாவினால் அவர்கள் பெற்ற பாக்கியங்கள் ஏராளமானவை. அவர்களுடைய தவ்பாவினால் அவர்களுக்கு கிடைத்த நன்மை களைக் கணக்கிட்டு ஜகாத் கொடுப்போமேயானால் ஊரிலுள்ள அத்தனை பாவிகளும் மன்னிக்கப் படுவார்கள்.

இறைநேசர்கள் மனிதர்களேயாவார்கள். அவர்கள் ஒன்றும் மலக்குகளல்ல. அவர்களும் பாவங்கள் செய்வதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் அவர்கள் பாவத்தில் நிலைத்திருக்கமாட்டார்கள் என்பதே அவர்களை பிரித்துக் காட்டும் அம்ச மாகும். அவ்வாறு இறைநேசர்கள் தரப்பிலிருந்து பெரும்பாவங்கள் நிகழ்ந்துள்ளது என்ற சம்பவங் களும் மிகவும் அரிதானவை. உண்மையில் அவை கிட்டத்தட்ட இல்லாதவை போன்றுதான்.

அல்லாஹ் அவர்களை பெரிய பாவங்களில் இருந்து பாதுகாக்கிறான் என்பது பொதுவான

விதியாகும். சில நேரங்களில் அவன் தனது பாதுகாப்புக் குடையை அவர்களிடமிருந்து சிறிது நேரம் அகற்றுகிறான். அதனால் அவர்கள் சற்று பிடிமானம் நழுவி தவறுகளைச் செய்கிறார்கள். பின்னர் அவர்கள் அழகான மன்றாடல்கள் மூலம் அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்கிறார்கள்.

அகிலங்களின் இரட்சகனான அல்லாஹ்விற்கு அவர்களின் அழுகை, கெஞ்சல், மன்னிப்புக் கேட்டல் போன்றவை அனைத்தும் விருப்பமானவைகளாக உள்ளன. சில நேரங்களில் உண்மையான தவ்பாவினால் அவன் மிகுந்த மகிழ்ச்சியடைகிறான். அவர்களின் பாவங்களை நன்மைகளாக மாற்றிவிடுவான்.

ஒரு இறைநேசர் தீயசெயல்களில் நிலைத்திருக்கமாட்டார் என்பதும் அதே நேரத்தில் தீய செயல்களில் நிலைத்திருப்பவர் இறை நேசராக இருக்க மாட்டார் என்பதும் மாறாத நியதியாகும். இதை ஒரு உதாரணத்தின் மூலம் விளங்கலாம். புனித குர்ஆனில் அசத்தியம் நுழைய முடியாது என்று ஒரு வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது பொய் அதில் இடம் பெற முடியாது என்பதே இதன் கருத்தாகும்.

இதன் அர்த்தம் எழுத்து மற்றும் அச்சிடலில் பிழைகள் ஏற்பட முடியாது என்பதல்ல. யாராவது

அலட்சியம் காட்டினால் புனித குர்ஆனில் எழுத்துக்களில் பிழைகள் ஏற்படலாம். ஆனால் இந்த பிழைகள் குர்ஆனில் நிரந்தரமாக இடம் பெறமுடியாது. குர்ஆனை மனனம் செய்த ஒரு அறிஞர் அதை ஓதும் போது உடனடியாக அதைச் சுட்டிக்காட்டிவிடுவார். இதனால் பிழை நீக்கப்படும். ஆக பொய் என்றென்றும் உண்மையுடன் இணைந்திருக்க முடியாது.

இவ்விதத்தில் புனித குர்ஆனுடைய எழுத்தில் ஒரு பிழையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைப் போல இறை நேசர்களின் வாழ்வில் பெரும்பாவங்களின் பழக்கம் ஏற்பட்டிருக்கும் என்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

التَّائِبُ مِنَ الذَّنْبِ كَمَنْ لَا ذَنْبَ لَهُ

பாவத்திலிருந்து தவ்பா செய்தவர் பாவமே செய்யாதவரைப் போன்றவராவார்.

ஷரியத் – சுன்னத்தில் பிடிப்புடன் நிலைத் திருப்பவரே இறை நேசர் என்று அழைக்கப்படுவார். ஷைத்தான்கள் அவரை ஒரு தவறு செய்ய வைப்பதில் வெற்றி பெற்றாலும், அவர் உடனடியாக வருந்தி மனம் திருந்தி விடுவார். மேலும் அவர் பாவத்தில் நிலைத்திருக்கமாட்டார்.

நபிமார்கள் தவறே செய்யாதவர்கள். இறை

நேசர்கள் தவறு செய்த பின் அதில் நிலைத் திருப்பதிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் என்பதே நமது கொள்கையாகும்.

இங்கே மனதில் ஒரு கேள்வி எழுகிறது. இறை நேசர்கள் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருக்கும்போது ஏன் சில சமயங்களில் அந்தப் பாதுகாப்பிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படு கிறார்கள்?

இதற்கான பதில் என்னவென்றால்; அல்லாஹ் தன் அடியார்களுக்கு ஆசானாக இருந்து வெவ் வேறு சூழ்நிலைகளில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறான்.

அவன் தனது நேசர்களில் ஒருவரை தன்னைத்தானே குறைகூறி விமர்சிக்க சந்தர்ப்பம் ஏற்படும் விதத்தில் ஏதேனுமொரு செயலை செய்ய வைப்பான். அதன் மூலம் அவரிடமிருந்து தற்பெருமை மற்றும் ஆணவத்தின் அடிச்சுவடு களை அடியோடு நீக்கிவிடுவான். அதனால் அவர்கள் அல்லாஹ்விடம் அடைக்கலமாகிவிடு வார்கள். அவர்களுக்கே தெரியாமல் அவர்களிடம் மறைந்திருந்த ஆணவத்தின் ஆணிவேர்கள் பிடுங்கப்பட்டு விடும்.

ஹஜ்ரத் அப்துல்லாஹ் அல்–உந்துலூசி (ரஹ்)

அவர்களின் சம்பவம் இதற்கு ஒரு சரியான உதாரணமாகும். ஒரு கிறிஸ்தவ குடியிருப்பின் அருகே செல்லும் போது ஹஜ்ரத் அப்துல்லாஹ் அல்-உந்துலூசி கிறிஸ்தவர்கள் அல்லாஹ்வுக்கு இணை வைப்பது எவ்வளவு முட்டாள்தனம்? என்று கூறினார்கள்.

ஆக இவ்வளவு சாதாரண விஷயத்திற்காக அல்லாஹ் அவர்களின் ஆன்மீக நிலையை அழித்துவிட்டான். அதனால் அவர் ஒரு கிறிஸ்தவப் பெண்ணைக் காதலிக்கத்தொடங்கினார். அவளை மணப்பதற்காக அவர் ஒருவருடம் வரை பன்றிகளை மேய்த்து வந்தார். மேலும் புனித குர்ஆனையும் ஹதீஸ்களையும் மனப்பாடம் செய்திருந்தும் அவை அனைத்தையும் மறந்துவிட்டார். இறுதியாக அவரது சீடர் ஹஜ்ரத் ஷிப்லி (ரஹ்) அவரைச் சந்திக்க வந்தபோது அவர்கள் இருவரும் அதிகமாக அழுது அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்டார்கள். அல்லாஹ் அவரது ஆரம்ப ஆன்மீக நிலையை மீண்டும் அவருக்கு வழங்கினான்.

நான் நேரான பாதையில் இருந்தால், அது என் அறிவின் திறமை அல்ல. மாறாக எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருணையின் முழுமை என்பதை ஹஜ்ரத் அப்துல்லாஹ் அறிந்து கொள்வதற்காகவே இவை அனைத்தும் நடந்தன.

ஹஜ்ரத் அப்துல்லாஹ்வின் நினைவிற்கு மறந்த அனைத்து விஷயங்களும் மீண்டும் நினைவிற்கு வந்துவிட்டன. மேலும் அவர் மார்க் கத்திற்காக முன்பை விட கடினமாக உழைக்கத் தொடங்கினார் மற்றும் மில்லியன் கணக்கான மக்களின் நேர்வழிக்கு காரணமாகத் திகழ்ந்தார்.

அல்லாஹ் தன்னுடைய பாதுகாப்பிலிருந்து நம்மை ஒருபோதும் பிரிக்காதிருப்பானாக!.

சுருங்கக் கூறினால், ஆன்மீக ஆசான்கள் தங்கள் சீடர்களுக்கு திக்ரு மற்றும் முராக் கபாவைக் கற்றுக் கொடுக்கிறார்கள். அதைத் தொடர்ந்து செய்வதன் மூலம், ஆன்மீகப் பாதையில் பயணிக்கக்கூடிய அவர்களது சீடர்கள் தனது சொந்த ஆசைகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெறுகிறார்கள். இதனால் அவர்களின் பார்வை தூய்மையாகிறது இதயம் பரிசுத்தமாகிறது. ஷரியத்திற்கு இயல்பாகவே இசையக்கூடியதாக அவர்களது உடல் பழகிவிடுகிறது. எனவே அவர்களுக்கு தூய்மை மற்றும் கற்புள்ள வாழ்க்கை வாழ்வது எளிதாகிறது. இன்னும் இந்தப் பண்பு விலாயத் எனும் உயர் பதவியைப் பெறுவதற்குக் காரணமாகிறது.

ஒருவர் எப்போது வயது வந்தவராகிறார் என்று ஹஜ்ரத் நக்ஷ்பந்த் புகாரி (ரஹ்) அவர்களிடம் கேட்ட போது ஹஜ்ரத் அவர்கள் ஷரியத்தின் சட்ட மரபிலா? அல்லது தரீக்கத்தின் முறையிலா? என்று கேட்க. அவர் இரண்டின் விவரங்களையும் எனக்குச் சொல்லுங்கள் என்று கேட்டார். அதற்கு ஹஜ்ரத் அவர்கள், ஒருவர் ஷரியத்தின் பிரகாரம் வாலிபராக ஆகுவது அவரது ஆணுறுப்பிலிருந்து விந்து வெளியேறும் போதாகும். தரீக்கத்தின் துறையில் அவன் விந்துவிலிருந்து வெளியேறும் போதாகும். அதாவது காமத்துடன் தொடர்புடைய பாவங்களைத் தவிர்க்கும் போதே வாலிபனாகிறான் என்று கூறினார்கள்.

இறை நெருக்கத்தின் ஒளி நெஞ்சில் நுழையும் போது ஆன்மீகத் தேடல் கொண்டவரின் உணர்ச்சி நிலைகள் அமைதியைக் காண்கின்றன. மேலும் ஆசைகள் என்னும் கடலில் அலைகளின் எவ்வித ஏற்ற இறக்கங்களும் இல்லாமல் அமைதியாகிவிடுகின்றன. இறுதியாக அவரு க்கு தூய்மையான, பரிசுத்தமான வாழ்வு அமைந்து விடும். இதுவே இறை நெருக்கத்தின் இலக்காகும். அதன் கட்டாய நிபந்தனையுமாகும்.

# பரிசுத்தமான வாழ்வினால் உலகிலேயே கிடைக்கும் உதவிகள்

1. உலகிலேயே உயர்பதவி கிடைத்தல்.

ஹஜ்ரத் யூசுப் (அலை) அவர்கள், அவர்களது சகோதரர்களால் ஒரு கிணற்றில் வீசப்பட்டார்கள். பின்னர் சில வணிகர்கள் அவரை அடிமையாக்கி எகிப்து நகரத்தில் விற்று விட்டனர். அப்போது ஹஜ்ரத் யூசுப் (அலை) அவர்கள் ஒரு சிறுவனாக இருந்தார்கள். அவர்களுக்கு எகிப்தில் உறவினர்களோ, நண்பர்களோ இல்லை. அவர்கள் வெளிப்படையாக எந்த உதவியற்றவராகவும் இருந்தார்கள். காலப்போக்கில் அவர்கள் முழு இளமைப் பருவத்தை அடைந்தபோது எகிப்துடைய கவர்னரின் மனைவி ஜூலைகா பாவம் செய்ய அழைத்தாள். ஹஜ்ரத் யூசுப் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடி அறையை விட்டு ஓடினார்கள். ஜூலைகா ஒரு தந்திரத்தைப் பயன்படுத்தி அவர்களை சிறைக்கு அனுப்பினார்.

ஹஜ்ரத் யூசுப் (அலை) அவர்கள் பல ஆண்டுகளாக சிறையின் கஷ்டங்களையும், சிரமங்களையும் தாங்கிக் கொண்டார்கள். ஒரு

கட்டத்தில் அல்லாஹ்வின் கருணையினால் அவர்கள் முழு மரியாதையுடன் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்கள். அது மட்டுமல்லாமல் அந்நாட்டு அரசப்பொக்கிஷங்களின் பாதுகாவலரா கவும் நியமிக்கப்பட்டார்கள். அல்லாஹ் அவர்களது காலடியில் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு வந்து போட்டான். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் ஒரு அடிமையாக இருந்தார்கள். ஆனால் இன்று அவர்கள் ஒரு எஜமானர்.

இது அவர்கள் தன்னுடைய கற்பு மற்றும் மானத்தைப் பாதுகாத்ததற்கு உலகிலேயே அவர்க ளுக்கு கிடைத்த வெகுமதியாகும். அவர்களது பெற்றோர் மற்றும் சகோதரர்கள் அனைவரும் அவர்களுக்கு முன்பாக தலை வணங்கும் அளவுக்கு அவர்களுக்கு மரியாதை கிடைத்தது. ஒவ்வொரு சகாப்தத்திலும் ஒவ்வொரு கால கட்டத்திலும் நபி யூசுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைப் போல இறையச்சத்துடனும் கற்பு டனும் வாழும் ஒருவரின் தலையில் அல்லாஹ் இது போன்ற ஒரு கண்ணியமான கிரீடத்தை வைத்தே தீருவான்.

2. குகைவாயில் திறந்து கொண்டது.

இந்த ஹதீஸ் பனூஇஸ்ரேவலர்களில் மூன்று மனிதர்களின் சம்பவத்தை விவரிக்கிறது.

ஒரு பயணத்தின் போது பலத்த மழை பெய்யத் தொடங்கியது. அதனால் அவர்கள் தப்பிக்க ஒரு குகையில் ஒளிந்து கொண்டனர். அல்லாஹ்வின் நாட்டத்தால் பலத்த மழையின் காரணமாக ஒரு பெரிய பாறை உருண்டு வந்து குகையின் வாயிலை அடைத்துக் கொண்டது. அந்தப் பாறை மிகப் பெரியதாக இருந்ததால் அவர்கள் மூவரும் ஒன்றாக சேர்ந்து நகர்த்த முயற்சி செய்தும் அதை நகர்த்த முடியவில்லை.

எனவே அங்கிருந்து வெளியேற வழி இல்லாமலானது. அவர்கள் மூவரும் மரணம் தங்கள் முன் சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர். கவலை, துக்கம், பயம் நிறைந்த இந்த நிலையில் மூவரும் தங்கள் வாழ்க்கையில் செய்த ஏதேனுமொரு நல்ல அமலை அல்லாஹ்விடம் சமர்ப்பித்து அதன் மூலம் அந்த குகையிலிருந்து ஈடேற்றம் பெற அல்லாஹ்விடம் துஆ செய்ய முடிவு செய்தனர்.

அவர்களில் ஒருவர் "நான் என் பெற்றோருக்கு மிகுந்த சேவைகள் செய்தேன். நான் மேய்த்து வந்த ஆடுகளிலிருந்து முதலில் பாலைக் கறந்து என் தாய்க்கு கொடுத்துவிட்டு பின்னர் நானும் என் பிள்ளைகளும் குடித்துவிட்டு உறங்குவோம்" என்றார்.

ஒரு நாள் இரவு நான் பாலுடன் வந்தபோது என் தாய் ஏற்கனவே தூங்கிவிட்டாள். அவளை எழுப்புவது பொருத்தமாக இருக்காது என்று நான் நினைத்தேன். என் கையில் பால் கோப்பை இருந்தவாறே காலை வரை காத்திருந்தேன்.

யா அல்லாஹ் என்னுடைய இந்த செயலை ஏற்றுக்கொண்டு எங்களுக்கு ஈடேற்றம் அளிப்பாயாக என்று கூறினார். பாறையின் மூன்றில் ஒரு பங்கு நகர்ந்தது. இருப்பினும் இன்னும் வெளியேற வழியில்லை.

பிறகு மற்றவர் "யா அல்லாஹ் நான் என் இளமைப் பருவம் முழுவதும் அழகான என் சிறிய தந்தை மகளை நேசித்து வந்தேன். அவளை ஏமாற்ற நான் பல தந்திரங்களையும், சாக்குகளையும் முயற்சித்தேன். ஆனால் அவள் தூய்மையானவளாகவும், ஒழுக்கமுள்ளவளாகவும் இருந்தாள். என் வலையில் அவள் விழவில்லை. ஒருமுறை வறுமையின் வலுக்கட்டாயத்தில் அவள் என்னிடம் கடன் வாங்க வந்தாள். என் விருப்பத்தை நிறைவேற்றினால் அவளுக்குப் பணம் தருவதாக உறுதியளித்தேன். நிர்பந்த மானவர் வேறென்ன செய்வார்!. எனக்கு முழு ஆதரவு தந்துவிட்டாள். நான் அவளை உடலுறவு கொள்ள அணுகியபோது அவள் அல்லாஹ்வை

அஞ்சிக் கொள். இந்த முத்திரையை அதற்குரிய அனுமதியின்றி உடைக்காதே என்றாள். அவளுடைய வார்த்தைகள் என்னை மின்னல் போல் தாக்கியது. அல்லாஹ்வின் பயத்தால் நான் உறைந்தது நின்றேன். நான் எந்தத் தவறும் செய்யாமல் அவளுக்கு பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டேன்."

யா அல்லாஹ், என்னுடைய இந்த செயல் உனக்குப் பிடித்தமானதாக இருந்தால் இந்த ஆபத்திலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக! என்றார். அந்தப் பாறை இன்னும் சற்று நகர்ந்தது. ஆனால் வெளியேறமளவு வழி கிடைக்கவில்லை.

பிறகு மூன்றாவது நபர், "யா அல்லாஹ், என் வேலைக்காரர்களில் ஒருவர் கோபமடைந்து கூலி எதுவும் வாங்காமல் சென்றுவிட்டார். நான் அவருடைய பணத்தில் ஒரு ஆட்டை வாங்கினேன். காலப்போக்கில் அது ஒரு பெரிய மந்தையாக மாறியது. நீண்ட நாட்களுக்குப் பிறகு அவர் கூலி வாங்க வந்தபோது நான் அவருக்கு அந்த முழு மந்தையையும் கொடுத்துவிட்டேன்."

யா அல்லாஹ், என்னுடைய இந்த செயல் உனக்கு விருப்பமானதாக இருந்தால் இந்த ஆபத்திலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக என்றார். பாறை மேலும் நகர்ந்தது. மூன்று

நண்பர்களும் அந்த குகையிலிருந்து வெளியே றினர்.

இந்த சம்பவத்தில் அல்லாஹ்விற்கு பயந்து பாவத்தை கைவிட்ட இரண்டாவது நபரின் செயல் நம்முடைய தலைப்புடன் தொடர்புடையதாகும். மேலும் அவரது செயல் அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஒரு கற்பொழுக்கமுள்ள தூய்மையான நபர் அல்லாஹ்வின் நேசத்திற்குரிய அடியார் என்பதை இதிலிருந்து அறிய முடிகிறது. அல்லாஹ் அவரை இந்த உலகத்தின் துக்கங்களிலிருந்து பாதுகாக்கிறான். மேலும் ஒவ்வொரு அடியிலும் அவனைப் பாதுகாக்கிறான்.

3. துஆ ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒரு காலத்தில் டெல்லியில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. மழை இல்லாததால், வயல்களில் பயிர்கள் விளையவில்லை. மரங்களில் பழங்கள் எதுவும் வரவில்லை. மக்கள் உணவுக்காக ரொட்டியைத் தேடத் தொடங்கினர். எல்லோரும் மழைக்காக பிரார்த்தனை செய்தனர். ஆனால் வானத்தில் மேகங்கள் எதுவும் இல்லை.

நகர மக்கள் அனைவரும் ஒரு நாள் ஒரு திறந்தவெளியில் கூடி பெண்கள், குழந்தைகள்

மற்றும் விலங்குகளை அவர்களுடன் அழைத்து வந்து பொது வெளியில் துஆ செய்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புக்கோரி மழைத் தொழுகை தொழ வேண்டும் என்று நகர அறிஞர்கள் முடிவு செய்தனர். அவ்வாறே திட்டமிட்டபடி மக்கள் நகரத்திற்கு வெளியே ஒன்று கூடினர். கடுமையான வெப்பமும், சுட்டெரிக்கும் வெயிலும் அனைவரின் முகங்களையும் வாட்டியது.

ஆண்களும், பெண்களும் மழைக்காக அழுது மன்றாடி துஆக்கள் கேட்டனர். ஆனால் நீண்ட நேரம் ஆகியும் வானத்தில் ஒரு மேகம் கூட தென்படவில்லை. அப்பாவி குழந்தைகளெல்லாம் துடிதுடிக்கத் தொடங்கினர். விலங்குகள் கூட தண்ணீருக்காக ஏங்க ஆரம்பித்தன. பிள்ளைகளின் அழுகையால் மக்களின் நிலை இன்னும் மோசமடைந்தது. இவ்வாறே காலை முதல் மாலை வரை துஆக்கள், அழுகை, தொழுகை தொடர்ந்து கொண்டே இருந்தது. ஆனால் மழைக்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை.

அம்மக்கள் துஆ செய்து கொண்டும், அதிகமாக அழுது கொண்டும் இருந்தபோது ஒரு இளம் பயணி அந்த மைதானத்தைக் கடந்து சென்றார். அவர் தன் ஒட்டகத்தின்

கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு நடந்து சென்று கொண்டிருந்தார். அதே நேரத்தில் அவருடன் ஒரு முக்காடு அணிந்த பெண்ணும் ஒட்டகத்தின் மீது சவாரி செய்து வந்து கொண்டிருந்தார்.

அவ்வளவு பேர் முனகுவதைக் கண்டதும் ஒட்டகத்தை ஒரு இடத்தில் நிறுத்தி அருகில் இருந்தவர்களிடம் என்ன விஷயம் என்று கேட்டார்.

அவர் இந்நிலையை அறிந்ததும் தனது ஒட்டகத்தின் அருகே சென்று கைகளை உயர்த்தி துஆ செய்தார். பலத்த மழை பெய்யத் தொடங்கியபோது கூட அவரது கைகள் கீழே இறங்கவே இல்லை. அந்த மகான் இளைஞனிடம் மகனே! நீ துஆ செய்தவுடன் பதில் கிடைத்து விட்டது. நீ எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி என்று கூறினார்.

அதற்கு அவர் "நிச்சயமாக என் தாய் அதோ அந்த ஒட்டகத்தின் மீது அமர்ந்திருக்கிறாள். நான் என் தாயின் மேலங்கியின் ஒரு மூலையைப் பிடித்துக்கொண்டு அல்லாஹ்விடம் துஆ செய்தேன் "அகிலங்களின் இரட்சகனே! இவள் என்னுடைய பத்தினியான கற்பு மிக்க தாய். என் தாயின் கற்பை முன் வைத்து நான் உன்னிடம் கேட்கிறேன். தயவுசெய்து உன் அடியார்களின்

மீது மழையை அனுப்புவாயாக" என்றேன். என் கைகள் இன்னும் கீழே கூட இறங்கவில்லை அதற்குள் மழை பெய்யத் தொடங்கிவிட்டது. அல்லாஹ்வின் பார்வையில் கற்பொழுக்கம் என்பது மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க செயல் என்பது தெளிவாகிறது. அது அல்லாஹ்வின் முன் சமர்ப்பிக்கப்பட்டால் அல்லாஹ் துஆக்களை நிராகரிக்க மாட்டான்.

4. பரிசுத்தமான வாழ்விற்கு பரிசுத்தமான வாழ்வே பரிசு.

அல்லாஹ் கூறியுள்ளான்;

اَلطَّيِّبَاتُ لِلطَّيِّبِيْنَ وَالطَّيِّبُوْنَ لِلطَّيِّبَاتِ

**தூய பெண்கள் தூய ஆண்களுக்கும், தூய ஆண்கள் தூய பெண்களுக்கும் உரியவர்கள்.**

பரிசுத்தமான பெண்கள் பரிசுத்தமான ஆண்களுக்குரியவர்கள். அவ்வாறே பரிசுத்தமான ஆண்கள் பரிசுத்தமான பெண்களுக்குரியவர்கள்.

கற்பொழுக்கத்துடன் வாழ்பவருக்கு இவ்வுலகிலேயே உடனடி வெகுமதியாக அவரது குடும்பத்தார்களையும் அதே கற்புள்ளவர்களாக, பரிசுத்தமானவர்களாக வாழ அல்லாஹ் வழிவகுக்கிறான்.

ஒரு ஹதீஸில் ஒரு மனிதர் தனது

மனைவியின் குணத்தைப் பற்றி என் மனைவியின் நடத்தையில் எனக்கு சந்தேகம் இருப்பதாக கூறி இது தனக்கு மிகுந்த மன உளைச்சலையும், சிரமத்தையும் ஏற்படுத்துகிறது என்று நபி ﷺ அவர்களிடம் புகார் செய்தார். அதற்கு நபி ﷺ அவர்கள் நீங்கள் பிறருடைய மனைவிமார்களின் விஷயத்தில் பரிசுத்தமானவர்களாக நடந்து கொண்டால் அவர்கள் உங்கள் மனைவிமார்களின் விஷயத்தில் பரிசுத்தமானவர்களாக நடந்து கொள்ளவார்கள் என்று கூறினார்கள். இந்தப் பரிமாற்றமே இங்கு வெகுமதியாக ஆக்கப்பட்டிருப்பதைக் காட்டுகிறது.

ஒரு விபச்சாரம் செய்பவர் ஆபாசமான செயலைச் செய்வதோடு மட்டுமல்லாமல் அவர் இதனால் மற்றவர்களுக்குக் கடனாளியாகவும் மாறிவிடுகிறார். இந்தக் கடனை அவரது குடும்ப உறுப்பினர்களில் யாராவது நிறைவேற்றியே தீர வேண்டும்.

பாவத்திற்கான தண்டனை அப்பாவச்செயலின் தன்மையைப் பொறுத்தே அமையும் என்பது அடிப்படை விதியாகும். எனவே மற்றவர்களின் மரியாதையைக் கெடுப்பவர் தனது மரியாதையை மற்றவர்கள் கெடுக்க வழி ஏற்படுத்துகிறார் என்று அர்த்தமாகும்.

நீங்கள் கற்புடன் இருங்கள் உங்கள் பெண்களும் கற்புடன் இருப்பார்கள். மேலும் ஒரு முஸ்லிமுக்கு பொருந்தாததைத் தவிர்ந்திருங்கள். உண்மையில், விபச்சாரம் ஒரு கடன். எனவே நீங்கள் அந்தக் கடனை வாங்கினால் அதற்கான பகரத்தை உங்கள் குடும்பத்தினரிடமிருந்து வசூல் செய்யப்படும் என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள்.

ஒருவன் விபச்சாரம் செய்தால் அவனுடைய சுவர் வழியாகவேனும் சரி அவனுடன் விபச்சாரம் செய்யப்படும்

ஓ மனிதனே! நீ ஞானியாக இருந்தால் இதை அறிந்துகொள்

புகாரா நகரில் ஒரு பிரபலமான நகைக்கடைக்காரரின் நகைக்கடை ஒன்று இருந்தது. அவரது மனைவி நல்ல குணமும் அழகும் கொண்டவள். 30 ஆண்டுகளாக ஒரு வாலிப பணியாள் அவரது வீட்டிற்கு தண்ணீர் கொண்டு வரும் பணியைச் செய்து கொண்டிருந்தார். அவர் மிகவும் நம்பகமானவர். ஒரு நாள் தண்ணீர் ஊற்றிய பிறகு, அவர் ஒப்படைத்த பொருட்களை வாங்கும்போது நகைக்கடைக்காரரின் மனைவியின் கையைப் பிடித்து காமசிந்தனையுடன் அழுத்திவிட்டு வெளியேறினார்.

இவ்வளவு நீண்ட கால நம்பிக்கை உடைந்து போனதால் அந்தப் பெண் மிகவும் சோகமாக இருந்தாள். அவளுடைய கண்களில் இருந்து கண்ணீர் வழியத் தொடங்கியது. இதற்கிடையில் நகைக்கடைக்காரர் வீட்டிற்கு சாப்பிட வந்தார். அவரது மனைவி அழுவதைக் கண்டார். நிலைமை குறித்து அவர் கேட்டபோது நகைக்கடைக்காரரின் கண்களில் இருந்தும் கண்ணீர் வந்தது. மனைவி என்ன நடந்தது என்று கேட்டார்.

இன்று ஒரு பெண் நகை வாங்க வந்தாள். நான் அவளுக்கு நகைகளைக் கொடுக்கத் தொடங்கியபோது அவளுடைய அழகான கை எனக்குப் பிடித்திருந்தது. எனவே அவளது கையை காமத்தால் அழுத்தினேன். இது என் மீதான கடன். எனவே உன்னுடைய கையை அழுத்தி அவர் என் கடனை அடைத்துள்ளார் என்று நகைக்கடைக்காரர் அவளிடம் கூறினார்.

இனி நான் அப்படி ஒருபோதும் செய்ய மாட்டேன் என்று நான் உன்னிடம் மனதார வருந்துகிறேன். இருப்பினும் நாளை உன்னுடன் அவர் எப்படி நடந்து கொள்கிறார் என்று நீ என்னிடம் சொல்ல வேண்டும். மறுநாள் அவர் வழமைப் போல் தண்ணீர் ஊற்ற வந்தார். அவர் நகைக்கடைக்காரரின் மனைவியிடம் 'நான்

மிகவும் வெட்கப்படுகிறேன்' என்று கூறினார். நேற்று சைத்தான் என்னை ஒரு வெட்கங் கெட்ட காரியத்தை செய்ய வைத்துவிட்டான். நான் உண்மையிலேயே மனந்திருந்திவிட்டேன். இதுபோல் மீண்டும் ஒருபோதும் நடக்காது என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன் என்று கூறினார்.

நகைக்கடைக்காரர் மற்ற பெண்களைத் தொட்டதற்கு தவ்பா செய்த போது அப்பணியாள் இவரது மனைவியைத் தொட்டதற்கு தவ்பா செய்துவிட்டார் என்பது விசித்திரமானது. இச் சம்பவத்தை இமாம் பரூசி தனது தப்ஸீர் ரூஹுல் பயானில் கூறியுள்ளார்கள்.

ஒரு அறிஞர் ஒரு மன்னரின் முன் 'ஒரு விபச்சாரம் செய்யக்கூடியவனின் செயலின் கடனை ஏதோ ஒரு வகையில் அவனது குடும்பத்தார்களில் ஒருவரோ அல்லது அவரது பிள்ளைகளில் ஒருவரோ தான் செலுத்த வேண்டும் என்ற மேலே கூறப்பட்ட நியதியைக் கூறினார்.

அந்த மன்னன் இதை அனுபவித்தில் அறிந்துணர எண்ணினான். அவனுக்கொரு அழகில் ஒப்பற்ற மகள் இருந்தாள். அவன் தன் மகளான இளவரசியை அழைத்து சாதாரண உடைகளை அணிந்து உன் முகத்தைத் திறந்த

வண்ணம் தனியாக சந்தைக்குச் சென்று வா என்று கூறினான். மக்கள் உன்னை எப்படிக் காண்கிறார்கள் என்று என்னிடம் வந்து சொல் என்றான். அதன்படி இளவரசி சந்தையைச் சுற்றி வந்தாள். மஹ்ரம் அல்லாத எந்த ஆணும் அவளைப் பார்த்தால் உடனே வெட்கத்தாலும், அடக்கத்தாலும் வேறு பக்கம் திரும்பிக் கொள்வதைக் கண்டாள்.

அந்த இளவரசியின் அழகை யாரும் கவனிக்கவில்லை. நகரம் முழுவதும் சுற்றி வந்த பிறகு இளவரசி தனது அரண்மனைக்குள் நுழைந்தபோது தாழ்வாரத்தில் இருந்த ஒரு வேலைக்காரன் அவளை அரண்மனைப் பணிப் பெண் என்று நினைத்துத் தடுத்து நிறுத்தினான். திடிரென்று அவன் அவளைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டான். இதைக் கேட்ட மன்னன் அதிர்ச்சி யுற்றவனாக இப்போது உனக்கு நடந்தது என் சொந்தக் கைகளால் நான் செய்ததுதான். விபச்சாரம் என்பது பழிவாங்கப்படும் செயல் என்பது உண்மைதான். அதற்கான தண்டனை எப்போதும் செலுத்தப்படும் என்று கூறினான்.

மேற்கண்ட சம்பவங்களிலிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் நமது குறைபாடுகளின் விளைவுகளை நம் குழந்தைகள் அனுபவிக்க

நேரிடும். ஒவ்வொரு ஆணும் தனது குடும்பப் பெண்களுடன் பிற நபர்கள் ஒழுக்கத்துடனும் கண்ணியமாகவுமே நடக்க வேண்டும் என்று விரும்புவார். மேலும் அவர் மஹ்ரம் அல்லாத பெண்கள் விஷயத்தில் கவனமுள்ளவராக மாற வேண்டும்.

எல்லோரும் தங்கள் வீட்டுப் பெண்கள் கற்புடன் கண்ணியமாக இருக்க வேண்டும் என்றே விரும்புவார்கள். அப்பேற்பட்டவர்கள் அந்நியப் பெண்களை ஆசைப்படுவதை விட்டும் விலகியிருக்க வேண்டும்.

அதேபோல் தங்கள் கணவர்கள் நல்லொழுக்க மானவர்களாக மானக்கேடான காரியங்களை விட்டும் விலகியவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பினால் அப்பெண்கள் அந்நிய ஆண் களின் பால் ஏறெடுத்தும் பார்க்க வேண்டாம். அதனால் கற்புக்குக் கற்பு என்ற அடிப்படையில் வெகுமதி கிடைக்கும். யாராவது முன்னால் இது போன்ற பாவம் செய்திருந்தால் அவர்களுக்காக மன்னிப்பின் வாயில்கள் தற்போதும் திறந்துள்ளன. எனவே உண்மையான தவ்பாவினால் உங்கள் அல்லாஹ்வை சமாதானம் செய்யுங்கள். அதனால் உலகில் பழிக்குப் பழி வாங்கப்படுவதை விட்டும், மறுமையில் இழிவு ஏற்படுவதை விட்டும் விடுதலை கிடைத்து விடும்.

## பரிசுத்தமான வாழ்விற்கு மஹ்ஷர் மைதானத்தில் கிடைக்கும் கண்ணியம்

நியாயத்தீர்ப்பு நாளில் ஏழு சாரார் அர்ஷின் நிழலில் அமர்ந்திருப்பார்கள் என்று ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த நாளில் அர்ஷின் நிழலைத் தவிர வேறு எந்த நிழலும் இருக்காது. இந்த ஏழு அதிர்ஷ்டசாலிகளில் ஒருவர் கற்பொழுக்கத்துடன் வாழ்ந்த மனிதராக இருப்பார். அவரை நல்ல குலம், கோத்திரமுள்ள ஒரு அழகான பெண் பாவம் செய்ய அழைத்த போது 'நான் அல்லாஹ்வை பயப்படுகிறேன்' என்று கூறி விலக்கிக் கொண்ட நபர்.

கற்பொழுக்கம் என்பது அல்லாஹ்வின் பார்வையில் எவ்வளவு மதிப்புமிக்க தன்மை என்பதை இதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

நியாயத்தீர்ப்பு நாளில் முழு மனிதகுலமும் (நஃப்ஸி, நஃப்ஸி) என் நிலை என்னவாகுமோ? என் நிலை என்னவாகுமோ? என்று புலம்பிக் கொண்டிருக்கும்போது சிலரின் மீது அல்லாஹ்

வின் விஷேசஅருளும், குறிப்பான சங்கையும் இறங்கிக் கொண்டு இருக்கும். அந்த பாக்கிய வான்களில் ஒருவராக தவறான தொடர்புக்கு பெண் தரப்பிலிருந்து அழைப்பு வந்தும், அவர் விரும்பினால் அவ்வாய்ப்பை நழுவ விடாமல் தவறு செய்திருக்க முடியும் என்றிருந்தும் தன் ஆன்மாவை அல்லாஹ்வின் அச்சத்தால் கட்டுப்படுத்திக் கொண்டவரும் அடங்குவார். அவர் தன் கற்புக்கு களங்கம் ஏற்படுவதிலிருந்து தற்காத்துக் கொண்டார். எனவே அவர் அல்லாஹ்வின் அர்ஷின் நிழலில் திருப்தியாகவும், மகிழ்ச்சியாகவும் வீற்றிருப்பார்.

# பரிசுத்தமான வாழ்விற்கே சுவன சுபச்செய்தி

நபி ﷺ அவர்கள், தூய்மையான வாழ்க்கை வாழ்பவர்களுக்கு சொர்க்கத்தைப் பற்றிய நற் செய்தி கூறினார்கள். அதுவும் அவர்களுடைய சொந்த உத்தரவாதத்தின் பேரில்.

مَنْ تَوَكَّلَ لِيْ مَا بَيْنَ رِجْلَيْهِ وَمَا بَيْنَ لِحْيَيْهِ تَوَكَّلْتُ لَهُ بِالْجَنَّةِ

யார் தனது தொடைகளுக்கு இடையிலுள்ள உறுப்பிற்கும் அதாவது தனது அந்தரங்க உறுப்பிற்கும், தனது தாடைகளுக்கு இடையில் உள்ள உறுப்பிற்கும் அதாவது தனது நாவிற்கும் அவற்றை தவறாகப் பயன்படுத்த மாட்டேன் என்று எனக்கு உத்தரவாதம் அளிக்கிறாரோ அவர் சுவனம் நுழைவதற்கு நான் உத்தரவாதம் கொடுக்கிறேன் என்றாரகள்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி ﷺ அவர்கள் இளைஞர்களிடம் கூறினார்கள்;

يَا شَبَابَ قُرَيْشٍ اِحْفَظُوْا فُرُوْجَكُمْ لَا تَزْنُوْا
اَلَا مَنْ حَفِظَ فَرْجَهُ فَلَهُ الْجَنَّةُ

"ஓ குறைஷி இளைஞர்களே, உங்கள்

அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள், விபச்சாரத்தில் ஈடுபடாதீர்கள். யார் தனது அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்கிறாரோ அவருக்கே சுவனம் உண்டு" என்றார்கள். எனவே சொர்க்கத்தின் நித்திய வெகுமதிகளைப் பெற இந்த உலகத்தின் தற்காலிக இன்பங்களையும், ஆசைகளையும் நாம் கட்டுப் படுத்துவது அவசியம்.

## கற்பொழுக்கமுள்ள வாழ்வும், இறை தரிசனமும்

மஹ்ரம் அல்லாத ஒரு பெண்ணுடன் சேர்த்து பாவம் செய்ய சக்தியிருந்தும் அல்லாஹ்வின் பயத்தால் அப்பாவத்திலிருந்து தவிர்ந்திருந்தவர் சுவனத்தில் அல்லாஹ்வைப் பார்க்கும் வாய்ப்பைப் பெறுவார்.

# ஹதீஸ்களில் கற்பொழுக்கமுள்ள வாழ்வு பற்றிய பிரார்த்தனைகள்

கற்பொழுக்கம் என்பது நபி ﷺ அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை மூலம் கேட்டு வந்த ஒரு உன்னதமான குணம்.

நபி ﷺ அவர்கள் பாவங்களை விட்டு பாதுகாக்கப்பட்டவர்களாக இருந்தும் இவ்வாறு துஆ செய்ததிலிருந்து பரிசுத்தமான, கற்பொழுக்கமுள்ள வாழ்வின் மீதுள்ள அவர்களுக்கு இருந்த பேராசை வெளிப்படுகிறது. மேலும் தங்களின் உம்மத்திற்கு இந்தத் தன்மையின் முக்கியத்துவத்தை போதிப்பதற்காகவும் இவ்வாறு துஆ செய்துள்ளார்கள்.

எனவே ஹதீஸ்களில் இதுபோன்ற பல துஆக்கள் வந்துள்ளன. அதில் நபி ﷺ அவர்கள் அல்லாஹ்விடம் கண்களின் தூய்மை, இதயத்தின் தூய்மை, கற்பு மற்றும் பாவக்கறையிலிருந்து பரிசுத்தத்தை தனது உயர்வான விருப்பமாகக் கூறி கேட்டுள்ளார்கள்.

இதோ சில பிரார்த்தனைகள்:

اَللّٰهُمَّ اِنِّیْ اَسْئَلُكَ الْهُدٰى وَالتُّقٰى وَالْعَفَافَ وَالْغِنٰى

யா அல்லாஹ், நான் உன்னிடம் நேர் வழியையும், இறையச்சத்தையும், தன்மானத்தையும், போதுமென்ற தன்மையையும் கேட்கிறேன்.

اَللّٰهُمَّ اِنِّیْ اَسْئَلُكَ الصِّحَّةَ وَالْعِفَّةَ وَالْاَمَانَةَ وَحُسْنَ الْخُلُقِ وَالرِّضَا بِالْقَدْرِ

யா அல்லாஹ், நான் உன்னிடம் ஆரோக்கியத்தையும், கற்பொழுக்கத்தையும், நம்பகத்தன்மையையும், நல்லொழுக்கத்தையும், உன் பங்கீட்டை பொருந்திக் கொள்வதையும் கேட்கிறேன்.

اَللّٰهُمَّ طَهِّرْ قَلْبِیْ مِنَ النِّفَاقِ وَعَمَلِیْ مِنَ الرِّيَاءِ وَلِسَانِیْ مِنَ الْكِذْبِ وَعَيْنِیْ مِنَ الْخِيَانَةِ فَاِنَّكَ تَعْلَمُ خَائِنَةَ الْاَعْيُنِ وَمَا تُخْفِی الصُّدُوْرُ

யா அல்லாஹ், என் இதயத்தை நயவஞ்சகத்திலிருந்தும், என் செயல்களை முகஸ்துதியிலிருந்தும், என் நாவைப் பொய்யிலிருந்தும், என் கண்களை மாயையிலிருந்தும் தூய்மைப் படுத்துவாயாக. நிச்சயமாக, கண்கள் மற்றும் நெஞ்சங்களில் மறைக்கப்பட்ட சூழ்ச்சியை நீ அறிவாய்.

اَللّٰهُمَّ اَلْهِمْنِىْ رُشْدِىْ وَاَعِذْنِىْ مِنْ شَرِّ نَفْسِىْ

யா அல்லாஹ், எனக்கு நேரான பாதையைக் காட்டுவாயாக, என் ஆன்மாவின் தீமையிலிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக.

اَللّٰهُمَّ اِنِّىْ اَعُوْذُبِكَ مِنْ مُنْكَرَاتِ الْاَخْلَاقِ وَالْاَعْمَالِ وَالْاَهْوَاءِ

யா அல்லாஹ், விரும்பத்தகாத ஒழுக்கங்கள், விரும்பத்தகாத செயல்கள் மற்றும் ஆசைகளை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

اَعُوْذُبِكَ مِنْ شَرِّ سَمْعِىْ وَبَصَرِىْ وَلِسَانِىْ وَقَلْبِىْ وَمَنِيِّىْ

என் செவிப்புலன், என் பார்வை, என் இதயம் மற்றும் என் விந்து ஆகியவற்றின் தீமைகளை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

நாமும் இந்த துஆக்களை ஓதுவதை பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். இவற்றின் பரக்கத்தினால் நாம் கற்புடைய, தூய்மையான வாழ்வைப் பெற முடியும்.

## பரிசுத்தமான வாழ்வு மீதான நபித் தோழர்களின் ஆர்வம்

இஸ்லாத்திற்கு முன்பு, அரேபியர்களிடையே மது அருந்துதல் மற்றும் ஒழுக்கக்கேடு பொதுவானதாக இருந்தது. மேலும் அவர்கள் தங்கள் சபைகளிலும், உரையாடல்களிலும் மிகுந்த பெருமையுடன் இதை வெளிப்படுத்தினர்.

புனித நபி ﷺ அவர்களின் தூய போதனைகளும், அவர்களின் உபதேசங்களும் நபித் தோழர்கள் வாழ்வில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதால் அவர்களின் வாழ்க்கை முற்றிலும் மாற்றமடைந்தது. அறியாமை காலத்தில் அனைத்து வகையான ஒழுக்கமீறல்களும், வழிதவறலுக்கும் ஆளாகியிருந்தனர். புனித நபி ﷺ அவர்களின் பரக்கத்தால் அவர்களின் ஆன்மாக்கள் மிகவும் தூய்மையானதாகி இந்த ஒழுக்கக் கேடுகளை விட்டும் முற்றிலும் வெளியேறினர்.

நபி ﷺ மக்காவிலிருந்து மதீனாவிற்கு இடம் பெயர்ந்தபோது மக்காவில் தங்கியிருந்த பலவீனமான மற்றும் ஆதரவற்ற மக்களுக்கு

உதவுவதற்கும், ஆதரவளிப்பதற்கும், அவர்களை பாதுகாப்பாக மதீனாவிற்க்கு கொண்டு வந்து சேற்பதற்க்கும் மர்ஷித் இப்னு அபி மர்ஷித் அல்–ஙனவி என்ற தோழரைப் பொறுப்பாக்கினார்கள்.

இது தொடர்பாக ஒருமுறை அவர்கள் மக்காவிற்கு வந்திருந்த போது தற்செயலாக அனாக் என்ற பெண்ணின் வீட்டைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அவள் இஸ்லாத்திற்கு முன்பு இவர்களுடன் தவறான உறவுகளைக் கொண்டிருந்த ஒரு நடத்தை கெட்ட பெண்ணா வாள். அந்தப் பெண் ஹஜ்ரத் மர்ஷித் அவர்களை அடையாளம் கண்டுகொண்டு தாமாக முன்வந்து அவரை அன்புடன் வரவேற்று இரவு தன்னுடைய வீட்டில் தங்கும்படி வற்புறுத்தினாள்.

ஹஜ்ரத் மர்ஷித் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் ஒளியின் மூலம் நேர்வழி பெற்றிருந்ததாலும், இதுபோன்ற மானக்கேடான விஷயங்களிலிருந்து வெறுப்படைந்ததாலும், வெளிப்படையாக "பழைய நாட்கள் இனி இல்லை. இஸ்லாம் விபச்சாரத்தைத் தடை செய்துள்ளது, எனவே என்னை விட்டு விடு" என்று கூறிவிட்டார்கள். நீங்கள் என் விருப்பத்தை நிறைவேற்றவில்லை என்றால், நான் ஒரு வம்பு செய்து உங்களை கைது செய்ய வைப்பேன் என்று அவள் மிரட்டினாள்.

ஆனால் அவளுடைய அச்சுறுத்தலையும் மீறி ஹஜ்ரத் மர்ஷித் (ரலி) அவர்கள் தங்களது மானம் கறைபடுவதை விரும்பாமல் அங்கிருந்து ஓடிப்போய் காஃபிர்களின் இருப்பிடத்தை விட்டு இரகசியமாக வெளியேறினார்கள்.

ஹஜ்ரத் அபூ மூசா அஷ்அரி (ரலி) அவர்கள் "என் மூக்கு ஒரு இறந்த உடலின் வாசனையால் நிரப்பப்படுவதை நான் விரும்புகிறேன், ஆனால் அந்நியப் பெண்ணின் வாசனையால் நிரப்பப்படு வதை நான் விரும்பவில்லை" என்று கூறுவார்கள்.

ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் நபி ﷺ அவர்களின் காலத்தில் ஒரு அழகான பெண் மசூதிக்கு வந்து நபி ﷺ அவர்களுக்குப் பின்னால் தொழுது கொண்டிருந்தாள். சில தோழர்கள் தாங்கள் அப் பெண்ணைப் பார்ப்பதைத் தவிர்க்க அவளுக்கு முன்னால் வந்து தொழுகையின் வரிசையில் அமர்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஒருமுறை நபித்தோழர்கள் ஒரு எதிரி நாட்டைக் கைப்பற்றினர். அவர்களின் படை ஒரு அமீரின் தலைமையில் அந்த நாட்டின் வழியாக அணிவகுத்துச் சென்றது. கிறிஸ்தவர்கள் நிர்வாணமான நிலையில் சில பெண்களை சாலையில் வரிசையாக நிறுத்தி அவர்களின்

ஈமானில் தடுமாற்றத்தை ஏற்படுத்த எண்ணினர். படைத் தளபதி இந்த வசனத்தை மட்டும் ஓதினார்: "விசுவாசிகளிடம் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளச் சொல்லுங்கள்." உடனே படையில் வந்த அனைத்து தோழர்களும் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொண்டனர். அவர்கள் அந்த நகரத்தைக் கடந்து சென்றுவிட்டனர். ஆனால் அந்நகரத்தின் சுவர்களைக் கூட பார்க்கவில்லை.

அவர்கள் திரும்பி வந்தபோது, மதீனா மக்கள் அவர்களிடம் நகரத்தில் உள்ள வீடுகளின் அமைப்பு எப்படி இருந்தது அவை எவ்வளவு உயரமாக இருந்தன என்று கேட்டார்கள். அவர்கள் "எங்களுக்கு உத்தரவு கிடைத்ததும், நாங்கள் எங்கள் பார்வையைத் தாழ்த்திவிட்டோம். மேலே தலைதூக்கிப் பார்க்கவே இல்லை. எனவே நகரத்திலிருந்து திரும்பும் வரை அந்த நகரத்தில் உள்ள வீடுகளின் உயரம் கூட எங்களுக்குத் தெரியாது" என்றார்கள்.

# ஈமான் கொண்ட பெண்களிடம் கற்பு மற்றும் ஒழுக்கத்தில் நிலைத்திருக்க பைஅத் செய்தல்

வெட்கமும், அடக்கமும் ஒரு பெண்ணின் அலங்காரமாகும். அவளுடைய இயல்பில் அவை வேரூன்றி உள்ளன. ஒரு பெண் இந்த அலங்காரத்தைப் பாதுகாக்கும் வரை, சமூகம் தூய்மை மற்றும் அமைதியின் தொட்டிலாகவே இருக்கும். ஒரு பெண் ஒழுக்கமற்றவளாக மாறி இந்த அலங்காரத்தைத் தூக்கி எறியத் தயாராக இருக்கும்போது சமூகத்தில் பல ஒழுக்கக் கேடுகளுக்கான கதவு திறக்கிறது.

எனவே, ஒரு பெண் தன் கற்பு மற்றும் மானத்தைப் பாதுகாப்பதில் கவனமாக இருக்க வேண்டும். இதனால் தான் நபி ﷺ அவர்கள் பெண்களிடம்

وَلَا يَزْنِيْنَ وَلَا يَقْتُلْنَ اَوْلَادَهُنَّ وَلَا يَاْتِيْنَ بِبُهْتَانٍ يَّفْتَرِيْنَهٗ بَيْنَ اَيْدِيْهِنَّ وَاَرْجُلِهِنَّ

விபச்சாரம் செய்யவோ, தன் குழந்தைகளைக் கொல்லவோ, அவதூறு புனையவோ மாட்டேன்

என்று சத்தியம் செய்ய உத்தரவிடப்பட்டார்கள்.

சில திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் இங்கே, ஒரு குழந்தையைக் கொல்வது என்பது கர்ப்பத்தில் உள்ள போது கருக்கலைப்பு செய்வதாகும். அவதூறு என்பது ஒருவரின் முறைகேடான குழந்தைகளை மற்றவரிடம் இணைத்து பொய்யாகக் கூறுவதாகும் என்று எழுதியுள்ளனர்.

# வெட்கமின்மையின் வெட்கக்கேட்டைப் பற்றி குர்ஆனில்

குர்ஆனில் 'ஆபாசம்' என்ற வார்த்தை அநாகரீகத்திற்குப்பயன்படுத்தப்பட்டுள்ளது.மேலும் பல இடங்களில் அது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் அல்லாஹ்

وَيَنْهٰى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ

மானக்கேடான மற்றும் தீய காரியங்களை மற்றும் வரம்புகளை மீறுவதை தடைசெய்கிறான் என்று கூறப்படுகிறது.

மற்றொரு இடத்தில்; நபியே கூறுங்கள்:

اِنَّمَا حَرَّمَ رَبِّيَ الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ

நிச்சயமாக, கண்ணில் காணக்கூடிய அல்லது மறைக்கப்பட்ட அனைத்து தீமைகளையும் அல்லாஹ் தடைசெய்துள்ளான் என்று கூறப்படு கிறது.

மற்றொரு இடத்தில்; விபச்சாரம் ஒரு அநாகரீகம் மற்றும் மிகவும் மோசமான விஷயம்

என்று மிகத் தெளிவான வார்த்தைகளில் கூறப்படுகிறது.

لَا تَقْرَبُوا الزِّنَا إِنَّهُ كَانَ فَاحِشَةً وَّمَقْتًا وَّسَاءَ سَبِيْلًا

மேலும் விபச்சாரத்தை நெருங்காதீர்கள். அது ஒரு அநாகரீகம் மற்றும் ஒரு தீய வழி என்று கூறப்படுகிறது.

மனித சிற்றின்ப உணர்வுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக அல்லாஹ் சில வரம்புகளை நிர்ணயித்துள்ளதாக இந்த வசனங்கள் விளக்கு கின்றன. வரம்புகளை மீறுபவர் அநாகரீகத்தைச் செய்தவராவார். இவ்வாறு, சூரா முஃமினூனில் விளக்கப்பட்டுள்ளது.

وَالَّذِيْنَ هُمْ لِفُرُوْجِهِمْ حَافِظُوْنَ إِلَّا عَلٰى أَزْوَاجِهِمْ أَوْ مَا مَلَكَتْ أَيْمَانُهُمْ
فَإِنَّهُمْ غَيْرُ مَلُوْمِيْنَ فَمَنِ ابْتَغٰى وَرَاءَ ذٰلِكَ فَأُولٰئِكَ هُمُ الْعَادُوْنَ

மேலும் அவர்களின் மனைவிகள் மற்றும் பெண் அடிமைகளைத் தவிர மற்றவர்களின் விஷயத்தில் தங்களின் அந்தரங்க உறுப்புகளைப் பாதுகாப்பவர்கள். அதைத் தவிர வேறு எதையும் செய்பவர்கள் வரம்பு மீறியவர்களாவர்.

முஸ்லிம்களாகிய நாம், திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள தெளிவான போதனைகளைப் பின்பற்றி, அடக்கத்தையும் கற்பையும்

கடைப்பிடித்து வாழ்வது நமது தார்மீகப் பொறுப்பாகும். கற்பொழுக்கமுள்ள வாழ்க்கையை நமது குறிக்கோளாகக் கொண்டு வாழ்வதற்கு அல்லாஹ் நமக்கு நல்லருள் பாளிப்பானாக. ஆமீன்.